# அரையாண்டு பொதுத் தேர்வு - 2019

## பத்தாம் வகுப்பு

Reg.No.

நேரம்: 3.00 மணி

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள்: 100

அறிவுரை :

1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

14 x 1 = 14

குறிப்பு : i) இப்பிரிவில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதி யார்?
   அ) T. முத்துசாமி ஆ) P.S சிவசாமி
   இ) V.S. சீனிவாசசாஸ்திரி ஈ) G.R நடேசன்
2. எந்த நாடு முதல் உலகப்போருக்குப்பின் தனித்திருக்கும் கொள்கையை கைக்கொண்டது
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
   இ) ஜெர்மனி ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
3. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
   அ) 1805 மே 24 ஆ) 1805ஜுலை 10
   இ) 1806 ஜுலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10
4. கூற்று ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும் விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.
   காரணம்: ஜோதிபாபூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார் விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
   அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கு பொருத்தமானதாக இல்லை.
   ஆ) கூற்று சரி காரணம் கூற்றுக்கு பொருத்தமானதாக உள்ளது
   இ) இரண்டுமே தவறு
   ஈ) காரணம் சரி ஆனால் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.
5. இந்தியாவைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதிகளின் முன்னோடி ________ஆவார்.
   அ) சி.வை தாமோதரன் ஆ) பெரியார்
   இ) ராஜாராம் மோகன் ராய் ஈ) மறைமலையடிகள்
6. இந்தியாவின் உயரமான புவீயீர்ப்பு அணை ________
   அ) ஹிராகுட் ஆ) பக்ராநங்கள் அணை
   இ) மேட்டூர் அணை ஈ) நாகார்ஜீன சாகர் அணை
7. பொருந்தாததை தேர்ந்தெடுக்கவும்.
   அ) வெள்ளப்பெருக்கு கால்வாய் ஆ) வற்றாத கால்வாய்
   இ) ஏரிப்பாசனம் ஈ) கால்வாய்
8. வெள்ளி இழைப்புரட்சி என்பது ________
   அ) பால் உற்பத்தி ஆ) முட்டை மற்றும் கோழிகள்
   இ) பழங்கள் ஈ) பருத்தி
9. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
   அ) 3 மற்றும் 5 ஆ) 4 மற்றும் 15 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

10. தமிழ்நாட்டில் அதிக பரப்புளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் ______
அ) வேலூர் ஆ) தருமபுரி இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு
11. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
அ) ஒருமுறை ஆ) இருமுறை
இ) மூன்றுமுறை ஈ) எப்பொழுதும் இல்லை
12. இடி மின்னல் நிலம் என்று அறியப்படும் நாடு ______
அ) நேபாளம் ஆ) இந்தோனேஷியா இ) பூடான் ஈ) அந்தமான்
13. நாட்டு வருமானம் அளவிடுவது ______
அ) பணத்தின் மொத்த மதிப்பு
ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
14. GST பற்றி கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
(i) GST ஒருமுனை வரி
(ii) இது மத்திய மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
(iii) இது சூலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.
(iv) இது இந்தியாவின் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்
அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (ii) , (iii) மற்றும் (iv) சரி
இ) (i) , (iii) மற்றும் (iv) சரி ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி

## பகுதி - II

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 10 x 2 = 20
**28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

15. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
16. மூன்றாம் உலகநாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
17. வாரிசு இழப்புக்கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளை பட்டியலிடவும்.
18. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக
19. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?
20. இந்தியாவின் உயிர்க்கோள காப்பகங்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.
21. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
22. தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப்பட்டியலிடுக.
23. நீதிப்பேராணை என்றால் என்ன?
24. பிரிக்ஸ் [BRICS] உறுப்பு நாடுகளின் பெயர்களை எழுது.
25. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
26. FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.
27. வரிகளின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.
28. பல்நோக்கு திட்டம் என்றால் என்ன?

## பகுதி - III

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 10 x 5 = 50
**வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

29. கோடிட்ட இடத்தை நிரப்புக:-
(i) இராணுவ நீக்கம் செய்யப்பட்ட ______பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
(ii) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறையின் பங்கு______ சதவீதத்தை வகிக்கிறது.

(iii) ________ தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ஆவார்.
(iv) ________ வரியில் வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.
(v) சாத்தனூர் அணை ________ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

30. பொருத்துக

i) சிங்யென்ரீ - வைகுண்ட சாமிகள்
ii) டிரான்ஸ்வால் - சிங்காரவேலர்
iii) அய்யாவழி - கொரியா
iv) தீர்த்தகிரி - தங்கம்
v) தொழிலாளன் - ஓடாநிலை

31. பொருத்துக.

i) டெகிரி அணை - நேபர் நகர்
ii) காகித ஆலை - திருச்சிராப்பள்ளி
iii) இன்சாட் - இந்தியாவின் உயரமான அணை
iv) ஜிப்சம் - கன்னியாகுமரி
v) பொதிகை மலை - செயற்கைக்கோள் தகவல் தொடர்பு

32. அ. வேறுபடுத்துக.

i) இந்தியாவில் கடல் மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன்பிழப்பு
ii) வண்டல்மண் மற்றும் கரிசல் மண்

ஆ. காரணம் கூறு.

இந்திய பெரும் பாலைவனம் 'மருஸ்தலி' என்று அழைக்கப்படுகிறது.

33. பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
34. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றும் மின்விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.
35. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.
36. சாலைப்பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
39. உலகமயமாக்கின் சவால்களை எழுதுக.
40. தமிழ்நாட்டில் நெசவுத்தொழில் தொகுப்பு பற்றி எழுதுக.

குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டு காட்டுவதற்கு பதிலாக அவற்றைப்பற்றிய குறிப்புகளை மட்டுமே எழுத வேண்டும்.

41. பின் வருவனவற்றிற்கு காலக்கோடு வரைக.

1910 - 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகள்.

42. இந்திய வரைபடத்தில் கீழ்க்கானும் இடங்களைக் குறிக்கவும்.

i) மீரட் ii) பாரக்பூர் iii) டெல்லி iv) கான்பூர்
v) ஜான்சி

## பகுதி - IV

இரு வினாக்களுக்கும் விடையளிக்க. 2 x 8 = 16

43. a) ஹோசிமின்

அ) ஹோசிமின் எங்கே பிறந்தார்?
ஆ) ஹோசிமின் எவ்வாறு நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?
இ) ஹோசிமினின் புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?
ஈ) வியட் நாம் விடுதலைச் சங்கம் இந்தோ - சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது.

b) இராமலிங்க அடிகள்

அ) ஜீவகாருண்யம் என்றால் என்ன?

ஆ) அருட்பா என்றால் என்ன?

இ) சமரச வேத சன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கிய பங்களிப்பை குறிப்பிடுக.

ஈ) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?

*(அல்லது)*

44. c) வேலுநாச்சியார்

அ) வேலுநாச்சியாரின் இராணுவ தளபதி யார்?

ஆ) அவர் தேர்ச்சி பெற்றிருந்த தற்காப்பு கலைகள் யாவை?

இ) அவர் யாரை மண முடித்தார்?

ஈ) அவரது மகளின் பெயர் என்ன?

d) பெரியார் ஈ.வே.ரா.

அ) பெரியார் எப்போது திராவிடர்கழகத்தை தோற்றுவித்தார்?

ஆ) பெரியார் நடத்திய செய்தித்தாள்கள் பத்திரிக்கைகள் ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

இ) பெரியார் ஏன் வைக்கம் வீரர் என அறியப்பட்டார்?

ஈ) பெரியாரின் மிக முக்கிய பணியாக கருதப்படுவது எது?

45. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.

i) கொங்கணக்கடற்கரை
ii) கோதாவரி
iii) மாளவ பீடபூமி
iv) சுந்தரவனம்
v) மன்னார்வளைகுடா
vi) அந்தமான் நிக்கோபார் தீவுகள்
vii) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்
viii) சணல் விளையும் பகுதி

(அல்லது)

i) ஆரவல்லி
ii) மேற்குதொடர்ச்சி மலை
iii) சென்னை
iv) கோயமுத்தூர் பீடபூமி
v) வைகை ஆறு
vi) மலைக்காடுகள்
vii) மேட்டூர் அணை
viii) கடற்கரை மாவட்டம் ஒன்று

★★★★★★